## முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.78/2022

PW3–கலைஞர்தாஸ் நாள்.22.07.2025

**2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் பிளம்பராக தொழில் செய்கிறேன். இறந்துபோன ராஜுஐ எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 எங்குவைத்து எழுதப்பட்டது என்றால் பெரம்பலூர் பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள ஒரு புரோவுசிங் சென்டரில் வைத்து தயார் செய்யப்பட்டது. வா.சா.ஆ.1 எழுதவதற்கு ராஜு விவரம் சொன்னார். நானும் விவரம் சொன்னேன். சொத்துவிவரத்திற்காக பட்டா மற்றும் பத்திரத்தை ராஜு எடுத்துவரவில்லை. வா.சா.ஆ.1 ல் உள்ள சொத்துவிவரத்தை எதைப்பார்த்து தயார் செய்யப்பட்டது என்றால் ராஜுக்கு எல்லா விவரமும் தெரியும். அவர் சொன்னார். வேறு யாரும் ராஜு உடன் வரவில்லை. வா.சா.ஆ.1ல் கையெழுத்தை ராஜ்குமார் வீட்டில் வைத்து நான் போட்டேன். ராஜு செட்டியார் ரூ.5லட்சம் பணம் வாங்கினார். அதற்காக வா.சா.ஆ.1 எழுதப்பட்டது. என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்களை நான் தான் வழக்கறிஞரிடம் தகவல் சொன்னேன். அந்த விவரங்கள் எனக்கு நேரடியாக தெரிந்த விசயங்கள் ஆகும். வா.சா.ஆ.4 ஆவணத்தை நான் கைப்பட ராஜ்குமார் வீட்டில் வைத்து எழுதினேன். அதில் எழுதப்பட்ட தேதி குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 தவிர நான் வேறு ஆவணங்கள் எழுதியுள்ளேன். ஆவணம் எழுதுவற்கு எனக்கு உரிமம் கிடையாது. வா.சா.ஆ.4ல் சாட்சி கையெழுத்து விவரத்தில் சாட்சிகளின் தகப்பனார் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.4ல் உள்ள ராஜு கையெழுத்துகள் இடையே வித்தியாசம் உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் வீட்டில் வைத்து கையெழுத்து வாங்கும் போது மதியம் 2.00 மணி இருக்கும். விலைபேசிய விவரம் எனக்கு தெரியாது. ரூ.4,50,000/– தரவேண்டிய பாக்கி உள்ளது என்று வா.சா.ஆ.1ல் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான்.

ராஜ்குமார் எனக்கு உறவினரா என்றால் இல்லை சும்மா பழக்கம். ராஜ்குமார் தகவல் சொன்னதின் பேரில் இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் சாட்சி கையெழுத்து போட்ட வடிவேல் மற்றும் ராஜ்குமாரை யார் அழைத்து வந்தார்கள் என்றால் ராஜ்குமார் அங்கேயே இருந்தார். வடிவேலுவை ராஜு அழைத்து வந்தார். வா.சா.ஆ.1ல் சொத்துவிவரத்தில் வடபுறம் என்ற வார்த்தை கையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதுசம்மந்தமாக வரிபிளப்பு எதுவும் அந்த பக்கத்தில் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். வடபுறம் என்று நான் எழுதவில்லை என்றால் சரியல்ல. நான் தான் எழுதினேன். வா.சா.ஆ.4 ஆவணத்தை நான் எழுதவில்லை என்றால் சரியல்ல. நான் ராஜ்குமாரின் நண்பர் என்பதால் அவர் தயாரித்து வைத்திருந்த ஆணங்களில் பின்னிட்டு கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. ஆவணத்தை நான் தயார் செய்யவில்லை என்றும், எனக்கு அந்த அனுபவம் கிடையாது என்றால் சரியல்ல. நான் நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ளது போன்று வாதிக்கும், ராஜுக்கும் எந்த ஒப்பந்தமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:**</u>

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.